# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை – 2020

### தரம் - 11 | வரலாறு

பெயர் / சுட்டெண் : .....................

திரு.சவீரியான் குரூஸ் NDT (History)

**கவனிக்குக**

- ஒவ்வொரு வினாக்களுக்கும் நான்கு காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்
- அதில் மூன்றினை ஐந்து வரிகளுக்கு குறையாது விளக்குதல் வேண்டும்.

**செயலட்டை – 01**

**அலகு - 01**

01. இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் எவை ?
02. இலக்கிய மூலாதாரங்களினால் கிடைக்கும் பயன்கள் எவை ?
03. வரலாற்றைக் கற்பதற்கு தேவையான தொல்பொருள் மூலாதாரங்கள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக ?
04. வரலாற்றைக் கற்பதனால் கிடைக்கும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக?

**அலகு – 02**

01. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தினுள் அடங்கும் கீழ்வரும் விடயங்களுக்கு விளக்கமளிக்குக ?
    a. – வாழ்க்கை முறை
    b. - உணவுப் பழக்கவழக்கம்
    c. – தொழிநுட்பம்
    d. – மரணச் சடங்கு முறை
02. முன் வரலாற்றுக் காலத்தில் இடம்பெற்ற மாற்றங்கள் நான்கினைக் குறிப்பிடுக ?
03. வரலாற்றுக் கால குடியேற்றத்தின் கட்டமைப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக ?
04. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய பிரதான காரணிகள் எவை ?

**அலகு - 03**

01. அரசுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட கீழ்வரும் பதவி நிலைகளுக்கான விடயங்களை முன்வைக்குக
    a. குர்ஹபதி
    b. - கமிக
    c. - பருமக
02. பண்டுகாபயன் இலங்கை வரலாற்றில் முக்கியம் பெறுவதற்கான காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக ?
03. அரசியல் அதிகாரம் மையப்படுத்தும்போது துட்டகைமுனு மன்னன் முக்கியம் பெறும் விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக ?
04. வசபன், 1ம் விஜயபாகு மன்னர்களினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல், பொருளாதார பணிகளைக் குறிப்பிடுக ?

## அலகு – 04

01. நாட்டு மக்களுக்காக கீழ்வரும் அரசர்களால் மேற்கொள்ளப்பட்ட சுகாதார நலன்புரி நடவடிக்கைகளை முறையே தருக ?
    - a. – புத்ததாஸன்
    - b. – உபதிஸன்
    - c. – 5ம் மஹிந்தன்
    - d. – பண்டுகாபயன்
    - e. – காசியப்பன்
    - f. – துட்டகைமுனு
02. இலங்கையின் புராதன சமுதாயத்தில் காணப்பட்ட கீழ்வரும் பொருளாதார முறைகளை விளக்குக ?
    - a. – விவசாயம்
    - b. - கைத்தொழில்
    - c. - வர்த்தகம்
03. புராதன சமுதாயத்தில் காணப்பட்ட பிரதான சமயங்களைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக ?
04. முற்காலத்திலிருந்தே எமது சமுதாயத்தில் காணப்பட்ட இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டை உதாரணங்களுடன் விளக்குக?

## அலகு - 05

01. முன் வரலாற்றுக் காலத்தின் விஞ்ஞான அறிவைப் பறைசாற்றும் கீழ்வரும் சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்களுடன் விளக்குக ?
    - a. - களிமண் ஓடக்கல்லறை மயானம்
    - b. - மட்பாண்டங்களைத் தயாரித்தல்
    - c. – வீடமைப்புத் தொழிநுட்பம்
02. குளமொன்றில் காணப்படும் பகுதிகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றின் அமைப்பு , தொழிற்பாடு என்பவற்றை விளக்குக ?
03. புராதன காலத்தில் நீர்ப்பாசனவியலாளர்கள் கால்வாய்களை அமைக்கும்போது பயன்படுத்திய தொழிநுட்ப முறைகளை உதாரணங்களுடன் விளக்குக ?
04. விகாரைகளை அமைக்கும்போது பயன்படுத்தப்பட்ட தொழிநுட்பம், சுகாதாரத் தொழிநுட்பம் என்பவற்றுக்கு உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக?

## அலகு - 06

01. சமுதாயத்தினை நல்ல முறையில் நடாத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்கள், பாரம்பரியங்களுக்கு உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக ?
02. பண்டைய காலத்தில் கீழ்வரும் மன்னர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களை முறையே தருக ?
    - a. – 1ம் கஜபாகு
    - b. – 4ம் காசியப்பன்
    - c. – 4ம் உதயன்
    - d. - ஆமண்ட காமினி
    - e. – நிஸங்கமல்லன்
    - f. - 4ம் மஹிந்தன்
    - g. – 3ம் உதயன்
    - h. – 5ம் காசியப்பன்

03. முற்காலத்தில் இலங்கைச் சமுதாயம் பெண்களை எவ்வாறான நிலையில் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது என்பதனை உதாரணங்களுடன் குறிப்பிடுக?
04. புராதன சமூகத்தில் மக்கள் தாம் உட்கொண்ட உணவின் முறைகளை உதாரணங்களுடன் தருக ?

### அலகு – 07

01. 2ம் நகராக்க காலத்தில் கீழ்வரும் அரசர்களின் அரசியல் , சமயப்பணிகளைக் குறிப்பிட்டு விளக்குக ?
    a. - 2ம் பராக்கிரமபாகு
    b. – 4ம் பராக்கிரமபாகு
    c. – 6ம் பராக்கிரமபாகு
02. புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக?
03. 2ம் நகராக்க காலத்தில் வடக்கே எழுச்சி பெற்றிருந்த யாழ்ப்பாண இராசதாணியின் எழுச்சி, வீழ்ச்சிக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக ?
04. 2ம் நகராக்க காலத்தில் காணப்பட்ட பொருளாதார முறைகளை நான்கு விடயங்களைக் கொண்டு விளக்குக?

### அலகு - 08

01. கண்டி இராட்சியத்தில் கீழ்வரும் அரசு பரம்பரையில் ஆட்சி செய்த அரசர்களையும் அவர்களின் ஆண்டுகளையும் அட்டவணைப்படுத்துக ?
    a. - புதிய சிங்களப் பரம்பரை
    b. - பேராதனைப் பரம்பரை
    c. - நாயக்கர் பரம்பரை
02. கண்டி இராட்சிய வரலாற்றில் கீழ்வரும் அரசர்கள் முக்கியம் பெறும் விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக ?
    a. - 1ம் விமலதர்ம சூரியன்
    b. – 2ம் இராஜசிங்கன்
    c. – கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன்
03. கண்டி அரசர்களுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே இடம்பெற்ற கீழ்வரும் ஒப்பந்தங்களின் விடயங்களைக் குறிப்பிடுக ?
    a. - கி.பி 1638ல்
    b. - 1766
    c. – 1658ல்
04. கண்டி இராட்சியத்தில் நிர்வாகம் , பொருளாதாரம், சமூகம் போன்றவற்றின் கட்டமைப்பினை உதாரணங்களுடன் விளக்குக?

### அலகு – 09

01. மறுமலர்ச்சி தோன்றுவதற்கான பின்னணிக் காரணங்கள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக?
02. மறுமலர்ச்சிக் காலத்தில் கீழ்வரும் துறைகளில் ஏற்பட்ட மாற்றத்தை உதாரணங்களுடன் விளக்குக ?
    a. – சித்திரக்கலை
    b. – கட்டிடக்கலை
    c. – சிற்பக்கலை
03. மறுமலர்ச்சியின் மூலம் ஏற்பட்ட பிரதான விளைவுகளை கீழ்வரும் தலைப்புகளில் தருக ?
    a. – புவி தொடர்பான கொள்கை
    b. – நாடுகாண் பயணங்கள்

04. மறுமலர்ச்சியினால் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் , பொருளாதார மாற்றங்களைக் குறிப்பிட்டு விளக்குக?

### அலகு - 10

01. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தபின் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கான சாதகமான காரணங்கள் எவை ?
02. கீழ்வரும் போர்கள் தொடர்பாக சிறுகுறிப்பு தருக ?
    - a. - தந்துரைப் போர்
    - b. - பலனப்போர்
    - c. - ரந்தெணிவெலப் போர்
    - d. - கண்ணொருவப் போர்
03. போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றங்களைக் குறிப்பிடுக ?
04. ஒல்லாந்தர்கள் தமது பொருளாதார இலாபத்துக்காகவே உடன்படிக்கைகளை மேற்கொண்டனர் என்பதனை உதாரணங்களுடன் விளக்குக?

## செயலட்டை - 02

### அலகு - 01

01. பிரித்தாணியா தவிர ஏனைய நாடுகளில் பரவிய கைத்தொழில் புரட்சியானது தோல்வியடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக ?
02. கீழ்வரும் துறைகளின் கண்டுபிடிப்புக்களையும் அதனைக் கண்டுபிடித்தவர்களையும் அட்டவணைப்படுத்துக ?
    - a. – நெசவுத் துறை
    - b. – இரும்பு உருக்குத் துறை
    - c. – நிலக்கரித் துறை
    - d. – போக்குவரத்துத் துறை
03. கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை அரசியல் , சமூகம் , பொருளாதாரம் என்ற தலைப்புக்களில் விளக்குக ?
04. கைத்தொழில் புரட்சியினால் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிட்டு விளக்குக ?

### அலகு - 02

01. இலங்கை மீது பிரித்தாணியர் கவனம் செலுத்தியமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக?
02. கி.பி 1797ல் இடம்பெற்ற கலகத்துக்கான காரணங்களையும் , மியுறன் ஆணைக் குழுவின் சிபாரிசுகளையும் குறிப்பிட்டு விளக்குக ?
03. கி.பி 1803 , 1815ல் பிரித்தாணியர்கள் கண்டியை ஆக்கிரமித்தமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக ?
04. கி.பி 1818 , கி. பி 1848ல் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டத்துக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக ?

### அலகு - 03

01. மிஷணறிகள் தமது செயற்பாட்டை மேற்கொள்வதற்கு கையாண்ட வழிமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக ?
02. கீழ்வருவோர் பற்றி சிறுகுறிப்பு தருக ?
    - a. – ஹென்றி ஸ்டில்
    - b. – அநாகரிக தர்மபால
    - c. – ஆறுமுக நாவலர்
    - d. – M . C.சித்திலெப்பை